இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 170 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 17 – வியாழக்கிழமை 30 ஜனவரி 2025 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 170 : Thiruvalluvar Year - 2056 - Thai 17 - Thursday 30 January 2025 - Chennai 12 Pages ₹ 5.00


# வெற்றிக்கு அச்சாரமாக விழாக்கோலமான விழுப்புரம்!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன் பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

தமிழ்நாட்டு மக்களின் எண்ணங் களையும் எதிர்பார்ப்புகளையும் எப்பாடு பட்டேனும் நிறைவேற்றித் தரும் உறுதி யுடன் செயல்படும் உங்களில் ஒருவ னான என் தலைமையிலான திராவிட மாடல் அரசுக்கு மாவட்டங்கள்தோறும் மக்கள் அளித்து வரும் ஆதரவினையும் வரவேற்பினையும் ஒவ்வொரு முறை யும் நேரில் கண்டு நெஞ்சம் மகிழ்கிறேன்.

அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் கனிம ஏலத்திற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்ட மிட்டபோது, நாடாளுமன்றத்தில் கழகம் அதனை எதிர்த்து முழங்கியதுடன், மதுரை மாவட்ட மக்கள், வைகை, முல்லைப்பெரியாறு பாசனப் பகுதி விவ சாயிகள், சூழலியல் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட அனைவரின் கருத்துகளை யும் அறிந்து, டங்ஸ்டன் சுரங்கத்திற்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, "நான் முதலமைச்சராக இருக்கும்வரை டங்ஸ்டன் சுரங்கம் அமையாது" என்ற உறுதியையும் வழங்கினேன். டங்ஸ்டன் கனிமம் எடுக்கும் திட்டத்தைத் திரும்பப் பெறுவ தாக பா.ஜ.க. அரசு பணிந்தபிறகு, மதுரை மக்களின் அழைப்பை ஏற்று அங்கு சென்ற உங்களில் ஒருவனான எனக்கு அவர்கள் அளித்த வரவேற்பை யும், அவர்கள் பொழிந்த அன்பையும் கடந்த கடிதத்தில் குறிப்பிட்டுக் காட்டி யிருந்தேன். மதுரை மக்கள் காட்டிய அன்பின் மகிழ்வுடன் விழுப்புரம் மாவட் டத்தில் ஆய்வுக்கூட்டத்திற்குச் செல்கிறேன் என்பதையும் அதில் தெரிவித்திருந்தேன்.

ஜனவரி 27 அன்று விழுப்புரம் மாவட்டத்தின் எல்லைக்குச் சென்ற போது, கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும், மாண்புமிகு அமைச்சரு மான முனைவர் க.பொன்முடி தலை மையில் கழகத்தினர் திரண்டிருந்தனர். "ஆழ்கடலில் கண்டெடுக்கப்பட்ட நன்முத்து பொன்முடி" என்று நம் உயிர் நிகர் **தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்ட முனைவர் பொன்முடி, என் அன்பிற்கும் உரியவர் என்பதைவிட, என் மீது அளவற்ற அன்பும் நம்பிக்கையும் உரி யவர். விழுப்புரத்தைத் 'தளபதி மாவட்டம்' என்றே அவர் எப்போதும் குறிப்பிடுவார். அதற்கேற்ப வரவேற்பு ஏற்பாடுகளும் அமைந்திருந்தன.**

பொன்முடி அவர்களின் தலைமை யில், கழகத்தின் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர் அவர்களுடன் கழக நிர்வாகிகளும் உடன்பிறப்புகளும் திரண்டிருந்து மிகப் பெரிய வரவேற்பை உற்சாகத்துடன் வழங்கினார்கள். தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பைச் சிறப்பாக நிறைவேற்றும் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சேகரும் அவருடன் ஒருங்கிணைந்து செய லாற்றும் கழகத்தின் மூத்த - இளைய நிர்வாகிகளும் இணைந்து உங்களில் ஒருவனான எனக்கு வழங்கிய வர வேற்பைப் பெற்றுக்கொண்டு என்னு டைய அன்பை வழங்கினேன்.

கழக நிர்வாகிகளின் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டத்திற்குச் செல்வதற்கு முன்பாக ஒலக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சென்று அங்கு வரும் புறநோயாளிகளின் எண்ணிக்கை, சிகிச்சை பெற்று வரும் உள்நோயாளி களின் எண்ணிக்கை, மருத்துவர்களின் பணி, சிகிச்சை முறை ஆகியவற்றைக் கேட்டறிந்தும், பதிவேடுகளைப் பார்த்து உறுதி செய்தும் தெரிந்துகொண்டேன்.

இந்திய ஒன்றிய அரசால் வெளியிடப் பட்ட புள்ளிவிவரங்களின்படி தமிழ்நாடு சிறப்பாகச் செயல்படும் இலக்குகளில் மருத்துவத் துறையும் ஒன்று. முத்தமி ழறிஞர் கலைஞர் ஆட்சிப்பொறுப்புக்கு வந்தபோதெல்லாம் அந்தக் கட்டமைப்பை வலிமைப்படுத்தினார்.

## உங்களில் ஒருவன்

**கிராம மக்கள் சிகிச்சை பெற ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகரப் பகுதி மக்களுக்கு அரசு மருத்துவமனைகள், மாவட்டத் தலைமை மருத்துவமனை, மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி, அதனுடன் இணைந்த மருத்துவமனை, பெரிய நகரங்களில் பன்னோக்கு மருத் துவமனை என நம் உயிர்நிகர் தலைவர் உருவாக்கிய கட்டமைப்பை மேலும் விரி வாக்கம் செய்யும் வகையில் சென்னை கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை அமைத்தது உங்களில் ஒருவன் தலைமையிலான திராவிட மாடல் அரசு. ஆரம்ப சுகாதார நிலையங்கள் பலவும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.**

ஒலக்கூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் காய்ச்சல் சிகிச்சைப் பிரிவு, கர்ப்பிணிகள் பரிசோதனைப் பிரிவு, அறுவை சிகிச் சைக்குப்பின் கவனிப்பு பிரிவு ஆகிய பகுதிகளை நேரில் பார்வையிட்டேன். மருத்துவர்கள், செவிலியர்கள் உள் ளிட்ட மருத்துவப் பணியாளர்களின் சேவையைப் பாராட்டிவிட்டு, நோயாளி களுக்கான சிகிச்சைகளைக் காலதாமத மின்றி வழங்கவேண்டியதன் அவசி யத்தையும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம், கர்ப்பிணிப் பெண்களுக்கான ஊட்டச்சத்துப் பெட்ட கம் ஆகியவை உரிய முறையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதை யும் அறிவுறுத்திவிட்டுப் புறப்பட்டேன்.

திண்டிவனம் புறவழிச்சாலை அருகே அமைந்துள்ள மண்டபத்தில் கழகத் தினரைச் சந்தித்து ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காகச் சென்றபோது, **வழி யெங்கும் ஆண்களும் பெண்களுமாகப் பொதுமக்கள் திரண்டிருந்தனர். குறிப் பாக, இளைய தலைமுறையினர் அதிகள வில் திரண்டு நின்று மகிழ்ச்சியை வெளிப் படுத்தினர். அவர்களைக் கண்டதும், காரை விட்டு இறங்கி, அவர்களின் வர வேற்பைப் பெற்றபடியே ஆய்வுக்கூட்டம் நடந்த மண்டபம் வரை நடந்து சென்றேன். இளைஞர்களும், இளம் பெண்களும், மாணவ - மாணவியரும் 'அப்பா.. அப்பா..' என்று அன்பு பொங்க அழைத்தபோது, அவர்களின் உள்ளத்திலிருந்து வெளிப் பட்ட சொற்களைக் கேட்டு மகிழ்ந்தேன்.**



திண்டிவனத்திற்குப் புதிய பேருந்து நிலையம், தலைமை மருத்துவமனை, பாதாளச் சாக்கடை திட்டப்பணிகள், வட்டாட்சியர் அலுவலகம், அறிவுசார் மையம், சிப்காட் தொழிற்சாலை, மருத் துவப் பூங்கா உள்ளிட்ட பல திட்டங் களைத் திராவிட மாடல் அரசு வழங்கி யுள்ளதற்குத் திண்டிவனம் பகுதி மக்கள் வெளிப்படுத்திய நன்றியாகவே அவர் களின் வரவேற்பு அமைந்தது. **இந்த நல்லாட்சி தொடர வேண்டும் என்கிற மக்களின் எதிர்பார்ப்பை நம் கழக நிர்வாகிகளும், தொண்டர்களும்தான் 2026 தேர்தலில் தங்களின் உழைப்பின் மூலமாக நிறைவேற்ற வேண்டும்.**

விழுப்புரம் வடக்கு, தெற்கு ஒருங்கி ணைந்த மாவட்டக் கழக நிர்வாகிகளின் ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்று அவர்களின்


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


### யு.ஜி.சி. வரைவு நெறிமுறைகளை திரும்பப் பெறக்கோரி பிப். 6ல் டெல்லியில் போராட்டம்!

# மாநில அரசின் கோப்புகளில் கையெழுத்திட ஆளுநருக்கு கால நிர்ணயம் செய்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற தி.மு.கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 30 -**

**முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று (29.1.2025) காலை 11.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் உள்ள முரசொலி மாறன் கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற "தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில்" நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-**

தீர்மானம் : 1

**ஆளுநர் பதவி நீக்கப்படும் வரை அரசியல் மயமாகும் ஆளுநர் பதவியின் கண்ணியத்தைக் காத்திட ஆளுநர்களுக்கு "நடத்தை விதிகள்" (Code of Conduct) உருவாக்கிடவும், மாநில அரசின் கோப்புக் கள், மசோதாக்களில் ஆளுநர் கையெழுத் திடுவதற்கு கால நிர்ணயம் (Time Frame) செய்திடவும் வரும் பட்ஜெட் கூட்டத் தொடரில் தி.மு.க. வலியுறுத்தும்!**

தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் ஓர் அங்கம். ஆனால் அந்த அவையின் மரபை மதிக்கமாட்டார். சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களை கிடப்பில் போடுவார். மாநில அரசின் "Constitutional Head" ஆளுநர். ஆனால் மாநில அரசின் ஆளுநர் உரையை படிக்கமாட்டார். தமிழ்த்தாய் வாழ்த்தை சிறுமைப்படுத்துவார். சமஸ் கிருதம் இந்தி மொழி புகழ் பாடுவார்.

**ஆளுங்கட்சிக்கு எதிராக அரசியல் செய்யும் ஆளுநர்!**

ஆளுநர் மாளிகையின் ஒட்டுமொத்த செலவும் மாநில அரசின் அதாவது மாநி லத்து மக்களின் வரிப்பணம். ஆட்சி யில் இருக்கும் கட்சிக்கு வழிகாட்ட வேண்டியவர் ஆளுநர் மாளிகையில் அமர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் போல் அரசியல் செய்வார். பல்கலைக்கழக துணை வேந்தர் நியமனத்தில் மாநில அரசுடன் மோதல் போக்கை கடைப் பிடித்து "துணைவேந்தர்கள் இல்லாத பல்கலைக்கழகத்தை" உருவாக்குவார். ஆனால் அதே பல்கலைக்கழகங்களில் பா.ஜ.க. அரசியல் பிரசங்கம் செய்வார். அக்கப்போர் அரசியல் மட்டுமே ஆளுந ரின் அஜெண்டாவாக இருக்கிறது.

"ஆளுநரை நியமிப்பதற்குப் பதில் ஏன் தேர்ந்தெடுக்கக் கூடாது" என அரசியல் நிர்ணய சபையில் விவாதித்த போது "அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநர் அரசின் நிர்வாகத்தில் குறுக்கிடுவார். அப்படி அரசின் நிர்வாகத்தில் ஆளுநர் தலையிடுவது ஜனநாயகத்தை அடி மைப்படுத்துவது போலாகிவிடும் (amount to surrender of democracy)" என சட்ட அறிஞர்கள் குறிப்பிட்டனர். நியமிக்கப்பட்ட ஆளுநராக இருக்கும் தமிழ்நாடு ஆளுநர் மாண்புமிகு ஆர். என். ரவி இன்று அதைத்தான் அடாவடி யாகச் செய்து கொண்டிருக்கிறார்.

**வெகுஜன விரோத அரசியல் செய்யும் ஆளுநர்!**

தமிழ்நாட்டின் வளர்ச்சியிலோ, தமிழ்நாட்டு மக்களின் நலனிலோ, தமிழ்நாட்டின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்திலோ அவரே பதவிப் பிரமா ணம் எடுத்துக் கொண்ட அரசியல் சட் டத்திலோ நம்பிக்கை துளிகூட இல்லை. அவருக்கு இருக்கும் ஒரே ஆர்வம் வெகுஜன விரோத வலதுசாரி அரசியல் மட்டும்தான். அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

"அரசின் கொள்கை முடிவுகளை நிறைவேற்ற முழுமையாக ஒத்து ழைப்பு கொடுத்து துணை நிற்க வேண் டிய அரசியலுக்கு அப்பாற்பட்டவரை ஆளுநராக நியமிக்க வேண்டும்" என


தொடர்ச்சி 4ஆம் பக்கம்